பக்கங்கள் 14 + 04

மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

**தேர்தல் ஒத்திவைக்கப்படுமா?**

## சஜித் அணியினர் இடையீட்டு மனு!

ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்கக் கோரி உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவுக்கு இடையீட்டு மனுதாரராக ஐக்கிய மக்கள் 02

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 ஆனி 21 வெள்ளிக்கிழமை 05.07.2024 அதிர்வு 340



# பெருந்தலைவர் சம்பந்தனின் புகழுடலுக்கு திருகோணமலையில் உணர்வுபூர்வ அஞ்சலி

(எஸ்.நிதர்ஷன்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந் தலைவர் இராஜவரோதயம் சம்பந்தனின் புகழுடல் திருகோணமலையில் அன்னாரின் இல்லத்தில் இன்று முதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. அங்கு பலரும் அன்னாரின் புகழுடலுக்கு உணர்வுபூர்மாக அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

02



# பதுளையில் கோர விபத்து! நால்வர் பரிதாப உயிரிழப்பு!!

பதுளை, சொரணாதொட்ட பகுதியில் இன்று இடம்பெற்ற விபத்தில் நால்வர் உயிரிழந்தனர்.

லொறியொன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து, வீதியின் நடுவே கவிழ்ந்தது. அந்த லொறியில் பயணித்த அறுவர் படுகாயமடைந்தனர்.

வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டவர்களில் நால்வர் உயிரிழந்தனர். படுகாயமடைந்த மேலும் இருவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது எனத் தெரியவருகின்றது. மொனராகலை பகுதியைச் சேர்ந்த நால்வரே இவ்வாறு பலியாகினர்.

பதுளை நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த லொறியே விபத்துக்குள்ளானது.

கட்டுமான நிறுவனமொன்றில் பணிபுரியும் ஊழியர்கள், தொழில் நிமித்தம் சென்றுவிட்டு திரும்பும் வழியிலேயே விபத்து இடம்பெற்றது.







## பெருந்தலைவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெருந்தலைவர் சம்பந்தனின் புகழுடல் யாழ்ப்பாணத்தில் இருந்து இன்று காலை விசேட விமானம் மூலம் திருகோணமலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் உள்ள தந்தை செல்வா கலையரங்கில் சம்பந்தனின் புகழுடலுக்கு நேற்று பலரும் அஞ்சலி செலுத்திய நிலையில் புகழுடல் அங்கேயே வைக்கப்பட்டது.

தந்தை செல்வா கலையரங்கில் இருந்து இன்று காலை கார் மூலம் பலாலி விமான நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்ட அன்னாரின் புகழுடல், அங்கிருந்து திருகோண மலை – சீனன்குடா விமான நிலையத்துக்கு விசேட விமானம் மூலம் கொண்டு செல்லப்பட்டது.

திருகோணமலையில் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ள சம்பந்தனின் புகழுடல் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை இறுதிக் கிரியை நடைபெற்று தகனம் செய்யப் படவுள்ளது.

## சஜித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சக்தி இன்று உயர் நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்தது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி பர்மான் காசிம் இந்த மனுவைத் தாக்கல் செய்தார்.



# மன்னாரைச் சேர்ந்த மூவர் தமிழகத்தில் தஞ்சம்!

(ந.லோகதயாளன்)

இலங்கையில் இருந்து இரண்டு சிறுவர்கள் உட்பட மூவர் படகு மூலம் தமிழகத்துக்கு அகதிகளாகச் சென்றடைந்துள்ளனர்.

மன்னாரைச் சேர்ந்த தாயும், இரு பிள்ளைகளுமே இவ்வாறு அகதியாக தஞ்சம் அடைந்த நிலையில், அவர்களை மீட்ட மரைன் பொலிஸார், தனுஷ்கோடி மரைன் பொலிஸ் நிலையத்தில் வைத்து விசாரணை மேற்கொண்டனர்.

34 வயதுடைய யோகவள்ளி மற்றும் அவரது மகள் அனுஜா, மகன் விஷால் ஆகியோர் தலைமன்னாரில் 2 இலட்சத்து 75 ஆயிரம் ரூபா பணம் கொடுத்து இலங்கையில் இருந்து படகு மூலம் புறப்பட்டு நேற்று நள்ளிரவு 12 மணியளவில் தனுஷ்கோடி அடைந்தனர் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

# குளியல் காட்சியைப் படம் பிடித்த பொலிஸ் கொஸ்தாபல் சிக்கினார்

(ஆ.ரமேஷ்)

பெண் பொலிஸார் விடுதியின் குளியறையில் குளித்துக் கொண்டிருந்த பெண் பொலிஸ் கொஸ்தாபலை மறைந்திருந்து படம் பிடித்த ஆண் பொலிஸ் கொஸ்தாபல் ஒருவரை விளக்கமறியலில் வைக்குமாறு நுவரெலியா மாவட்ட நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நுவரெலியா மாவட்ட நீதிவான் பிரபுதிகா நாணயக்காரவால் இந்த உத்தரவு நேற்று மாலை பிறப்பிக் கப்பட்டது.

லிந்துலை பொலிஸ் நிலையத்தின் பெண் பொலிஸார் தங்குமிட விடுதி குளியலறையில் குளித்துக் கொண்டிருந்த பெண் பொலிஸ் கொஸ்தாபலை அதே பொலிஸ் நிலையத்தில் கொஸ்தாபல் பதவி வகிக்கும் ஆண் பொலிஸ் கொஸ்தாபல் தனது ஸ்மார்ட் போனால் படம் பிடித்து




வைத்திருந்துள்ளார்.

இந்த விடயம் ஏனைய பொலிஸாருக்குத் தெரியவந்ததையடுத்து விசாரணைகள் தொடரப்பட்டு மேற்படி பொலிஸ் கொஸ்தாபல் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது.

சந்தேகநபரை கைது செய்த லிந்துலை பொலிஸார், அவரை நேற்று நுவரெலியா நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தினர்.

இதன்போது இது தொடர்பான வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிபதி பிரபுதிகா நாணயக்கார, சந்தேகநபரான பொலிஸ் கொஸ்தாபலை எதிர்வரும் 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பித்தார்.

# லிந்துலை தீ விபத்தில் 5 குடியிருப்புகள் நாசம்!

## ஐந்து குடும்பங்களைச் சேர்ந்த 36 பேர் பாதிப்பு

(பி..கேதீஸ், ஆ.ரமேஸ், எஸ் சதீஸ்)

தலவாக்கலை, லிந்துலை பெயாவல் தோட்ட பெயாபீல்ட் பிரிவு தோட்டத்திலுள்ள ஐந்து குடியிருப்புக்கள் நேற்று இரவு தீக்கிரையாகியுள்ளன என்று லிந்துலை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் தீ விபத்து காரணமாக 5 குடும்பங்களைச் சேர்ந்த 36 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மின் கசிவு காரணமாக ஒரு குடியிருப்பில் ஏற்பட்ட தீ ஏனைய வீடுகளுக்கும் பரவியது என்று லிந்துலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சிசிர குமார தெரிவித்தார்.

அந்தத் தொடர் குடியிருப்பில் 24 குடியிருப்புகள் காணப்படுகின்ற நிலையில் ஏனைய குடியிருப்புகளுக்குத் தீ பரவாமல் அந்தத் தோட்டத் தொழிலாளர்களும், லிந்துலை பொலிஸாரும் இணைந்து சுமார் 2 மணி நேரம் போராடி தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

குயிருப்புகளிலிருந்த பெறுமதியான பொருட்கள், மாணவர்களின் சீருடைகள், பாடசாலை புத்தகங்கள் இன்னும் பல முக்கியமான ஆவணங்கள் எரிந்து நாசமாகியுள்ளன.

இந்தத் தீ விபத்தில் பாதிக்கப்பட்ட அனைவரும் தற்காலிகமாக அந்தத் தோட்ட வாசிகசாலையில் பாதுகாப்பாகத் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான உலருணவுகளையும் பொருட்களையும் வழங்குவதற்கு தோட்ட நிர்வாகமும் அந்தப் பகுதி கிராம உத்தியோகத்தரும் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

தீ விபத்து தொடர்பான மேலதிக விசா ரணைகளை லிந்துலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.










# கதிர்காம பாதயாத்திரிகர்களுக்கு இலவசமாக மருத்துவ முகாம்கள்!







(அபு அலா)

கதிர்காம பாதயாத்திரிகர்கள் நலன் கருதி கிழக்கு மாகாண சுகாதார சுதேச வைத்திய அமைச்சு, கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களம் மற்றும் கல்முனை, அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைகள் இணைந்து இலவச மருத்துவ முகாம்களை உகந்தை மற்றும் குமண போன்ற இடங்களில் நடத்தின.

“நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்” எனும் தொனிப் பொருளில் இடம்பெற்ற இந்த இலவச மருத்துவ முகாமின்போது, 2000 பாதயாத்திரிகர்களின் தாக சாந்திக்கான குளிர்பானம் வழங்கி வைக்கப்பட்டது.

இதனை அக்கரைப்பற்றைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் அல்ஹாஜ் அப்துல் சலாம் வழங்கினார்.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் பணிப்புரைக்கமைவாக, கிழக்கு மாகாண சுகாதார சுதேச மருத்துவ அமைச்சின் செயலாளர் மற்றும் சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் ஆகியோரின் அறிவுறுத்தல்களின் கீழ் கல்முனை மற்றும் அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோரின் வழிகாட்டலில் கிழக்கு மாகாண சுதேச மருத்துவ பிரதி மாகாண ஆணையாளர் வைத்தியர் எம்.ஏ.நபீலின் மேற்பார்வையில் 1000 பேருக்கு நோய் எதிர்ப்பாற்றல் மருந்து, உடல் உபாதைகளை நீக்கக் கூடிய மருந்துகள் மற்றும் உடல் வலிகளைப் போக்கும் ஆயுள்வேத மருந்துகளும் வழங்கப்பட்டன.

கடந்த 6 வருடங்களுக்கு முன்னர் கல்முனை பிராந்திய பணிப்பாளராக கடமையாற்றிய வைத்தியர் குணசிங்கம் சுகுணனால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்த இலவச மருத்துவ நடமாடும் சேவைகளுடன் குளிர்பானங்கள் மற்றும் நோய் எதிர்ப்பாற்றல் மருந்து போன்ற பல தரப்பட்ட மருந்துகள் தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருகின்றன.

# மட்டு.மகிழவட்டுவான் பாடசாலைக்கு ஸ்மார்ட் வகுப்பறை கையளிப்பு!





(பழுவூரான்)

மட்டக்களப்பு மண்முனை மேற்கு மகிழவட்டவான் மகா வித்தியாலய மாணவர்களின் பாவனைக்காக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஷவால் ஸ்மார்ட் வகுப்பறை நேற்று வியாழக்கிழமை (04) கையளிக்கப்பட்டது.

பாடசாலையின் அதிபர் எஸ்.கருணதாஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், ஐக்கிய மக்கள் சக்தியின் வடமாகாண அமைப்பாளர் உமாசந்திரா பிரகாஷ், மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் சோ. கணேசமூர்த்தி, தொகுதி அமைப்பாளர்கள், கட்சியின் முக்கிய உறுப்பினர்கள், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் முதலாவதாக ஸ்மார்ட் வகுப்பறை திறந்து வைக்கப்பட்டு மாணவர்களிடம் கையளிக்கப்பட்டது. சஜித் பிரேமதாஷ மாணவர்களுடன் கற்றல் செயல்பாடுகள் தொடர்பாகக் கலந்துரையாடினார்.

அதனைத் தொடர்ந்து பாடசாலையின் நன்மை கருதி பரதநாட்டிய மாணவர்களை ஊக்குவிக்கும் முகமாக அவர்களுக்கான ஆடைகள் மற்றும் அணிகள் வாங்குவதற்காக ஒரு லட்சம் ரூபா நன்கொடையாக வழங்கப்பட்டது. உயர்தர மாணவர்களுக்கு ஆங்கில அகராதி புத்தகங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# வினை வந்தே சூழும்

ஜனாதிபதி தேர்தல் குறித்துத் தேர்தல் ஆணையம் உத்தியோகபூர்வமாக அறிவித்தல் விடுப்பதைத் தடுக்கும்படி கோரி உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மனுவை விசாரணை செய்வதற்கு உயர் நீதிமன்றம் ஐந்து நீதியரசர்களைக் கொண்ட ஆயத்தை நியமித்தமையும் -

அந்த மனுவுக்கும் தமக்கும் தொடர்பில்லை எனவும், ஜனாதிபதியின் பதவிக்காலம் 5 வருடங்கள்தான் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திடீரென அறிவித்தமையும் -

ஜனாதிபதி தேர்தல் உரிய காலத்தில் நடைபெறுமா என்ற சந்தேகத்தை இலங்கை மக்கள் மனதில் தந்து நிற்கின்றன என்பது உண்மை.

தம்முடைய பதவிக்காலத்தை நீடிப்பதற்கு சட்டத்தின் பெயரால் முன்முயற்சி ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கும் நிலையில், ஜனாதிபதியின் பதவிக்காலம் தொடர்பில் இதுவரை பெரும் சந்தேகங்களும், குழப்பங்களும் நீடித்த போது வாய் திறக்காமல் மௌனம் காத்து, அக்குழப்பங்களுக்கு தூபமிடும் வகையில் நடந்து கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இப்போது நீதிமன்றத்தின் பெயரால் நடவடிக்கைகள் எடுக்கப்படும் சமயத்தில், தேர்தல் நடத்தும் காலம் தொடர்பில் தன்னைப் புத்தர் போல காட்ட முயல்கின்றமை, இயல்பாகவே மக்களுக்கு சந்தேகத்தைத் தந்திருப்பது மறுக்க முடியாத ஒன்று.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாவதற்கான களச் சூழலைப் பிரதம நீதியரசராக இருந்து, தாம் எவ்வாறு ஏற்படுத்தித் தந்தார் என்பதை முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா பிற்காலத்தில் பகிரங்கமாக ஒப்புக் கொண்டமை மக்களுக்குத் தெரியும்.

இலங்கையின் நீதித்துறை, நீதியின் அச்சாணியில் சுழல்கின்றதா என்பது தொடர்பில் மக்களுக்கு ஒரு பார்வை - தெளிவான நோக்கு - உண்டு. அந்தப் பின்புலத்தில்தான் இப்போது கட்டவிழும் நடவடிக்கைகளையும் மக்கள் சந்தேகத்துடன் பார்க்கின்றார்கள்.

1970 முதல் 1975 வரை நாட்டை ஆட்சி செய்வதற்கு தெரிவு செய்யப்பட்ட ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா சட்டத்தையும் நீதிமன்றத்தையும் பயன்படுத்தித்தான் 1977 வரை தமது ஆட்சியை நீடித்தார். அதனால் அடுத்த 17 ஆண்டுகள் அவரது கட்சி எதிரணியில் இருக்க வேண்டிய தண்டனை மக்களால் வழங்கப்பட்டது.

1977முதல் 1982 வரை அதிகாரத்துக்கு தெரிவு செய்யப்பட்ட ஜே. ஆர்.ஜெயவர்த்தன சட்டத்தையும் நீதிமன்றங்களையும் பயன்படுத்தித்தான் சர்வஜன வாக்கெடுப்பு என்ற பெயரில் பொதுத் தேர்தலை புறந்தள்ளி, 1989 வரை ஆட்சியை நீடித்தார். அதன் விளைவாகத்தான் ஜே.வி.பியின் இரண்டாவது கிளர்ச்சி வெடித்து, நாடே பேரிழப்பைச் சந்திக்கும் பேரவலம் நேர்ந்தது. அது மாத்திரமல்ல, அந்தச் சமயத்தை ஒட்டி 1995இல் தாம் பறி கொடுத்த ஜனாதிபதிப் பதவியை, இப்போது 27 ஆண்டுகள் கழித்து கோட்டாபய ராஜபக்ஷவின் புண்ணியத்தில் 'பிச்சை'யாக பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கிட்டியது.

மீண்டும் சட்டத்தையும் நீதியையும் நீதிமன்றங்களையும் காட்டி ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைத்து, பதவியில் நீடிக்கும் தந்திரம் செய்யப்படுமானால், சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு எல்லாம் அதன் தொடர்வினை காத்திருக்கும். கடந்த கால அனுபவப் பட்டறிவிலிருந்து பாடம் படிக்காதவர்கள் விளைவுகளை எதிர் கொள்ள வேண்டி வரும்.

தேர்தல் ஒத்திவைப்புக்குத் தாங்கள் எதிரானவர்கள் என்றும், உரிய காலத்தில் மக்களின் வாக்களிப்பு உரிமை நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கூட நாடகம் ஆடுகின்றது.

உள்ளூராட்சித் தேர்தல்களை நிதி அமைச்சர் என்ற முறையில் (கவனிக்கவும் ஜனாதிபதி என்ற முறையில் அல்ல, நிதி அமைச்சர் என்ற முறையில்) தேர்தல்களுக்கான நிதியை வெட்டி, அதை நடத்தாமல் பண்ணியவர் ரணில் விக்கிரமசிங்க. அதற்குத் தோன்றாய் துணையாய் இருந்து முண்டு கொடுத்து, அவர் நிதி அமைச்சராக இருக்கும் இந்த அரசு அந்த ஜனநாயக விரோத வேலையை முன்னெடுக்கக் காரணமாக இருந்தது மொட்டுக்கட்சிதான்.

மக்களின் வாக்களிக்கும் உரிமைக்கு ஆப்படிப்பவர்கள் அன்று தப்பிப் பிழைக்கலாம். ஆனால் என்றும் அல்ல. வினை வந்தே சூழும்.

# உலக வங்கியின் நிதி உதவியுடன் மண்முனை மேற்கில் பொதுச் சந்தை

## 21 மில்லியன் ரூபா ஒதுக்கீடு






(பழுவூரான்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பின்தங்கிய பிரதேச மக்களின் வாழ்வாதாரத்தைக் கட்டி எழுப்பும் செயற்பாடுகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்கமைய உள்ளூர் மேம்பாட்டு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் உலக வங்கியின் நிதி உதவியுடன் 21 மில்லியன் ரூபா செலவில் மண்முனை மேற்குப் பிரதேசத்தில் அமைக்கப்படவுள்ள புதிய சந்தைத் தொகுதிக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று வியாழக்கிழமை மண்முனை மேற்குப் பிரதேச பிரதேச சபைச் செயலாளர் கிருஷ்ணபிள்ளை தலைமையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக கிராமிய வீதிகள் இராஜாங்க அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் கலந்து கொண்டு அடிக்கல்லை நட்டு வைத்தார்.

இதன்போது மண்முனை மேற்குப் பிரதேச செயலாளர் திருமதி சத்யானந்தி நமசிவாயம், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் பூ.பிரசாந்தன், மண்முனை மேற்குப் பிரதேச செயலகப் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் எஸ். சபேசன், பிரதேச சபையின் ஊழியர்கள், பொது மக்கள் மற்றும் அரச உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

### இலங்கை யோகா கூட்டமைப்பு ஏற்பாடு செய்த

# ஆசிய யோகா சாம்பியன்ஷிப் போட்டியில் பண்டாரவளை மாணவனுக்குத் தங்கம்

இலங்கை யோகா கூட்டமைப்பு ஏற்பாடு செய்து நடத்திய முதலாவது ஆசிய யோகா சாம்பியன்ஷிப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று (30 கொழும்பு புதுசெட்டித்தெரு ஸ்ரீராம் கல்யாண மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் பண்டாரவளை ஸ்ரீசிவசுப்ரமணிய சுவாமி ஆலய அறநெறி பாடசாலை மாணவன் கணேஷன் வகீஷன் முதலாமிடத்தைப் பெற்று தங்கப்பதக்கம் வென்றுள்ளார்.

இவர் கொஸ்லாந்தையைச் சேர்ந்த திரு.திருமதி கணேஷன் – சுதர்ஷனி தம்பதிகளின் மகன் ஆவார்.




வரலாற்றில் முதல் தடவையாகச் சர்வதேச யோகா சாம்பியன்ஷிப் போட்டி ஒன்றில் முதலாமிடத்தை வென்ற மாணவன் கணேஷன் வகீஷனுக்கும் இவரை நெறிப்படுத்தி பயிற்சியளித்த சிவ விஷ்ணு பீட ஆசிரியர் வி.யோகசந்திரன், அறநெறி பாடசாலை ஆசிரியர்கள் யசோபிரசாத், செல்வி.ரக்ஷனா ஆகியோரையும் பண்டாரவளை ஸ்ரீசிவசுப்ரமணிய ஆலய அறங்காவலர் சபையினர், இந்து இளைஞர் மன்ற நிர்வாக சபையினர் மற்றும் யோகா பயிற்சியாசிரியர்கள், பெற்றோர்கள், சக மாணவர்கள் என பலரும் வாழ்த்தியுள்ளனர்.

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஷ காத்தான்குடி வருகை

# பதுறியா வித்தியாலயத்தில் ஸ்மார்ட் வகுப்பறை திறப்பு!





(அஸ்ஹர் இப்றாஹிம்)

எதிர்கட்சி தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஷவின் பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத் திட்டத்தின் கீழ், காத்தான்குடி பதுறியா வித்தியாலயத்தில் ஸ்மார்ட் வகுப்பறை எதிர்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஷவால் திறந்து வைக்கப்பட்டது.

இதனை திறந்து வைத்த பின்னர் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுடன் எதிர்க் கட்சித் தலைவர் கலந்துரையாடினார்.

இதையடுத்து எதிர்க் கட்சித் தலைவர் பாடசாலையில் ஆங்கில நூல்களை வாங்குவதற்காக பாடசாலைக்கு ஒரு லட்சம் ரூபா நிதியைக் கையளித்தார்

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் கலாநிதி எம். எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ், முன்னாள் பிரதியமைச்சரும் ஐக்கிய மக்கள் சக்தியின் பட்டிருப்பு தொகுதி அமைப்பாளருமான கணேசமூர்த்தி, ஐக்கிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு தொகுதி அமைப்பாளர் முஸ்தபா, காத்தான்குடி கோட்டக் கல்வி அதிகாரி ஹக்கீம், பாடசாலை அதிபர் ரிப்கான் உட்பட ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.



# சிறுவர் பாதுகாப்புத் தொடர்பில் பணிக் குழு அமைக்க ஆராய்வு




**(ஹஸ்பர்)**

திருகோணமலை மாவட்ட செயலகம் மற்றும் சி.இ.ஆர்.ஐ. நிறுவனம் என்பன இணைந்து மாற்று பராமரிப்பு பணிக்குழு மற்றும் சிறுவர்களை பாதுகாப்பாக வளர்ப்பதற்கு ஆதரவாக ஒரு சமூக சேவை பணிக்குழுவை நிறுவுதல் தொடர்பான கலந்துரையாடல் ஒன்றை நேற்று (04) மாவட்ட செயலக உப ஒன்றுகூடல் மண்டபத்தில் மேலதிக மாவட்ட அரச அதிபர் எஸ்.சுதாகரன் தலைமையில் இடம்பெற்றது.

சி.இ.ஆர்.ஐ. நிறுவனத்தின் தேசிய பணிப்பாளர் வி.தர்ஷனால் இந்தக் கலந்துரையாடல் பற்றிய அறிமுகம் மற்றும் நோக்கம் என்பன எடுத்து கூறப்பட்டது.

குழந்தைகள் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகள், குழந்தைகளை வலுப்படுத்துவதற்கான தேவைகள், தரவு அடிப்படை மேம்பாடு, முன்னோக்கி செல்லும் வழி பற்றிய திறந்த விவாதம் போன்ற பல விடயங்கள் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண சிறுவர் நன்னடத்தைத் திணைக்களத்தின் ஆணையாளர் திருமதி. ஆர். ரிஸ்வாணி, துறை சார்ந்த அதிகாரிகள், துறை சார் சார்ந்த உத்தியோகத்தர்கள், சி.இ.ஆர்.ஐ. நிறுவனத்தின் அதிகாரிகள் உட்பட உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.



# சமூர்த்தி வாழ்வாதார உதவி வழங்கல்



(சர்ஜூன் லாபீர்)

சமூர்த்தி திணைக்களத்தின் கீழ் வீடமைப்பு லொத்தர் வாழ்வாதார வேலைத் திட்டத்துக்காக உருவாக்கப்பட்ட வாழ்வாதரக் கருத்திட்டத்தின் கீழ் கல்லரிச்சல் கிராம சேவகர் பிரிவில் சுய தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில் 2 லட்சம் ரூபா பெறுமதியில் நடமாடும் உணவு வண்டியைத் தயாரித்து அதனை அறிமுகப்படுத்தும் நிகழ்வு நேற்று (04) சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல் முஹம்மது ஹனீபாவின் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட சமூர்த்தி பணிப்பாளர் எம்.ஏ.சி அகமட் சாபீர், சம்மாந்துறை பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் யூ.எம் அஸ்லம், சமூர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் எம்.பி.எம். ஹுசைன், வலய முகாமையாளர்கள், சமூர்த்தி தலைமைப்பீட முன்னாள் முகாமையாளர், சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் என பலரும் கலந்துகொண்டனர்.



# பண்டாரவளையில் கௌரவிப்பு நிகழ்வு



(பொகவந்தலாவ நிருபர் எஷ்.சதீஷ்)

பண்டாரவளை ஊவாஹைலன்ஸ் கல்லூரியில் இருந்து பல்கலைகழகங்களுக்கு தெரிவாகி பட்டம் பெற்றவர்களையும், தெரிவாகி தற்போது மேற்படிப்பை மேற்கொண்டு வருபவர்களுக்கும், ஆசிரிய சமூகத்தினரையும் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் மற்றும் ஜனாதிபதியின் ஆலோசகர் வடிவேல் சுரேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.







# தொழில் முனைவோர் வேலைத் திட்டத்துக்கு கற்பிட்டி, முசல்பிட்டி கிராமம் தெரிவாகியது







**(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)**

இளம் விவசாய தொழில் முனைவோர் தேசிய வேலைத் திட்டத்தின் கீழ் கற்பிட்டி பிரதேச செயலாளர் பிரிவின் முசல்பிட்டி கிராமம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த வேலைத் திட்டம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் கருத்திட்டத்தின் அடிப்படையில் கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமின் சிபாரிசுக்கு அமைய கற்பிட்டி, முசல்பிட்டி கிராமம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்துக்கு சுமார் ஒரு கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் செயற்றிட்டத்தின் ஆரம்ப நிகழ்வும் மக்கள் பங்கேற்புடனான மதிப்பீடும் நேற்று வியாழக்கிழமை முசல்பிட்டி கிராம சேவையாளர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் மற்றும் கற்பிட்டி பிரதேச செயலாளர் சமில ஜெயசிங்க, திட்டமிடல் அதிகாரிகள், விவசாய திணைக்கள அதிகாரிகள், கிராம சேவை அதிகாரிகள் உட்பட பல அரச திணைக்கள உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

இந்தச் செயற்றிட்டத்துக்கான இணைப்பாளராக நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமின் முசல்பிட்டி இணைப்பாளர் அன்வர் சதாத் மௌலவி, வட்டார இணைப்பாளர் பீ.எம். மூசின் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

# விசேட வீடமைப்பு வேலைத் திட்டத்தில் வீடுகளுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு





**(சர்ஜுன் லாபீர்)**

ரண்விமன, ஜெயவிமன தேசிய விசேட வீடமைப்பு வேலைத் திட்டத்தின் கீழ் சம்மாந்துறை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட சம்மாந்துறை-7, செந்நெல் கிராமம், மட்டக்களப்பு தரவை-02 ஆகிய கிராம சேவகர் பிரிவுகளில் 04 வீடுகளுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று வியாழக்கிழமை சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மது ஹனீபா தலைமையில் இடம்பெற்றது.

பிரதேச செயலக சமூர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் எம்.பி.எம். ஹுசைனின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ்.ஜெகராஜன் கலந்து கொண்டு வீடுகளுக்கான அடிக்கல் நட்டார். அத்துடன் காசோசலைகளையும் வழங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் கௌரவ அதிதிகளாக அம்பாறை மாவட்ட சமூர்த்தி பணிப்பாளர் எம்.ஏ.சி அகமட் சாபீர், சம்மாந்துறை பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் யூ.எம் அஸ்லம், சமூர்த்தி திட்ட, வலய, அபிவிருத்தி முகாமையாளர்கள், முன்னாள் சமூர்த்தி முகாமையாளர் உட்பட கிராம சேவகர்கள், சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.



# கல்முனை பிராந்திய வைத்தியசாலைகளுக்கு மருத்துவ உபகரணம், தளபாடம் கையளிப்பு!

(பாறுக் ஷிஹான்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கீழ் உள்ள ஆதார வைத்தியசாலைகள் உள்ளிட்ட அவசர தேவைகள் உள்ள பிரதேச வைத்தியசாலைகள் சிலவற்றுக்கும் மருத்துவ உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் என்பன வழங்கப்பட்டன.

மருத்துவ உபகரணங்கள் மற்றும் தளபாடங்களை உரிய வைத்தியசாலைகளுக்கு கையளிக்கும் நிகழ்வு நேற்று (04) கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் பிராந்தியப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது சம்மாந்துறை, நிந்தவூர், திருக்கோவில் ஆகிய ஆதார வைத்தியசாலைகள் மற்றும் பனங்காடு ஒலுவில், அன்னமலை, இறக்காமம் ஆகிய பிரதேச வைத்தியசாலைகளுக்கும் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பிராந்திய பிரிவுத் தலைவர்கள், சம்மாந்துறை, நிந்தவூர், திருக்கோவில் ஆதார வைத்தியசாலைகளின் வைத்திய அத்தியட்சகர்கள், பிரதேச வைத்தியசாலைகளின் பொறுப்பு வைத்திய அதிகாரிகள், பணிமனையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.


குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33, Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998





# மெத்தப்படித்த ஞானி என்ற நினைப்பில் அண்ணாமலை வாயால் வடை சுடுகிறார்

## எடப்பாடி பழனிசாமி காட்டமான விமர்சனம்



**கோவை, ஜீலை 05**

“அண்ணாமலை மெத்தப்படித்த ஞானி. அவர் வாயால் வடை சுடுகி-றார்.”. என்று எடப்பாடி பழனிசாமி கூறினார்.

கோவை விமான நிலையத்தில் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியவை வருமாறு:-

ஈரோடு இடைத்தேர்தலில் தி.மு.க. எப்படி நடந்துகொண்டது என்பதை நாடே அறியும். ஜனநாயக முறைப்படி இடைத் தேர்தல் நடைபெறவில்லை என்பது பா.ஜ.க. தலைவர் அண்ணாமலைக் குத் தெரியும். தமிழ்நாட்டில் பா.ஜ.க. எங்கே வளர்ந்துள்ளது?. 0.52 சதவீதம் குறைவான வாக்குகளையே பா.ஜ.க. பெற்றிருக்கிறது. 500 நாள்களில் 100 வாக்குறுதிகளை நிறைவேற்றுவேன் எனக்கூறித்தான் கோவை மக்களின் வாக்குகளை அண்ணாமலை பெற்றார்.

அண்ணாமலை வந்த பிறகுதான் பா.ஜ.கவுக்கு பலம் வந்ததுபோல் மாயையை உருவாக்குகிறார். வேண்டுமென்றே அ.தி.மு.கவைக் குறை சொல்லித் திட்டமிட்டுப் பேசி வருகிறார் அண்ணாமலை. பா.ஜ.க. தலைவராக தமிழ்நாட்டு மக்களுக்கு மத்திய அரசிடம் இருந்து என்ன திட்டங்களை அண்ணாமலை பெற்று தந்திருக்கிறார்?. தமிழ்நாட்டு மக்களுக்கு எந்த நன்மையும் செய்யாத பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை வாயால் வடை சுடுகிறார்.

பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை பேட்டி மூலம் தன்னை அடையாளப்படுத்திக் கொள்கிறார். மற்ற கட்சிகளை அவதூறாக பேசுவதை அண்ணாமலை வாடிக்கையாக வைத்துள்ளார். அண்ணாமலை மெத்தப்படித்தவர் மிகப் பெரிய அரசியல் ஞானி. அவரது கணிப்பு அப்படி இருக்கிறது. நாடாளுமன்ற தேர்தலில் தி.மு.கவை விட ஒரு லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் அண்ணாமலை தோல்வி அடைந்துள்ளார்.

கடந்த தேர்தலில் 18.8 வீத வாக்குகள் பெற்ற பா.ஜ.க., இந்தத் தேர்தலில் 18.2 வீதம் மட்டுமே பெற்றுள்ளது. இடைத் தேர்தல்களில் அ.தி.மு.க. வெற்றி பெற்றுள்ளது. மக்களவை தேர்தல்களில் தி.மு.க. வெற்றி பெற்றுள்ளது. தமிழ்நாட்டு மக்களைப் பொறுத்தவரை சட்டப்பேரவை தேர்தலுக்கு ஒரு மாதிரியும், மக்களவை தேர்தலில் ஒரு மாதிரியும் வாக்களிக்கின்றனர்.

கடந்த 2014 மக்களவை தேர்தலில் கோவை தொகுதியில் பா.ஜ.க. வேட்பாளர் இப்போதைய கவர்னர் சி.பி. ராதாகிருஷ்ணன் பெற்ற வாக்குகளை விட 2024 தேர்தலில் அண்ணாமலை குறைவான வாக்குகளைப் பெற்றார்.

கடந்த தேர்தலில் 300 தொகுதிகளில் வெற்றி பெற்று ஆட்சி அமைத்த பா.ஜ.க. தற்போது கூட்டணி கட்சிகளின் ஆதரவோடு ஆட்சி அமைக்க வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது என்பதை அண்ணாமலை புரிந்து கொள்ள வேண்டும்.

ஜெயலலிதாதான் அ.தி.மு.கவை இனி ஏற்று நடத்துவார், அனைவரும் அவருக்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என ஜானகி அம்மையார் அறிக்கை வெளியிட்டதைப்போல, நற்பண்புடன், நல்லெண்ணத்தின் அடிப்படையில் சசிகலாவும் செயல்பட்டால் நன்றாக இருக்கும் என அ.தி.மு.க. தொண்டர்கள் நினைக்கின்றனர். - இவ்வாறு அவர் கூறினார்.




# பிரிட்டன் பொதுத் தேர்தலில் தொழில் கட்சி பெருவெற்றி!




**லண்டன், ஜுலை 05**

பிரிட்டன் நாடாளுமன்ற தேர்தலில் 14 ஆண்டுகளுக்கு பிறகு கன்சர்வேட்டிவ் கட்சி தோல்வி அடைந்துள்ளது.

பிரிட்டன் நாடாளுமன்றத்தில் மொத்தம் உள்ள 650 தொகுதிகளுக்கான தேர்தல் நேற்று நடைபெற்றது. இதில் ஆளும் கட்சியான கன்சர்வேட்டிவ் கட்சி, பிரதான எதிர்க் கட்சியான தொழிலாளர் கட்சி, லிபரெல் ஜனநாயகக் கட்சி ஆகியவை வேட்பாளர்களை நிறுத்தி இருந்தன.

கருத்துக் கணிப்பு முடிவுகளின் படி பிரதமர் ரிஷி சுனக் தலைமையிலான ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சி கடுமையான தோல்வியை சந்திக்கும் எனவும், பிரதான எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சி பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கும் எனவும் கூறப்பட்டு இருந்தது. பிரிட்டன் நேரப்படி இரவு 10 மணிக்கு வாக்குப்பதிவு முடிந்தது. வாக்குப்பதிவு முடிந்ததும், வாக்கு எண்ணிக்கை தொடங்கியது. இதில் துவக்கம் முதலே கீர் ஸ்டார்மர் தலைமையிலான தொழிலாளர் கட்சி தொடர்ந்து முன்னிலை வகித்து வருகிறது. பெரும்பான்மைக்கு தேவையான 326 இடங்களுக்கும் மேல் தொழிலாளர் கட்சி வெற்றி பெற்றது. கீர் ஸ்டார்மர் தனது சொந்த தொகுதியில் வெற்றி பெற்றார்.

பெரும்பான்மைக்கு மேற்பட்ட இடங்களில் தொழிலாளர் கட்சி வெற்றி பெற்றிருக்கும் நிலையில் கீர் ஸ்டார்மர் பிரிட்டனின் புதிய பிரதமராக பொறுப்பேற்க உள்ளார்.

14 ஆண்டுகளுக்கு பிறகு தொழிலாளர் கட்சி பிரிட்டனில் ஆட்சியைப் பிடிக்கிறது. பிரக்சிட் எனப்படும் ஐரோப்பிய யூனியனிலிருந்து பிரிட்டன் நாடு வெளியே வந்த பிறகு நடைபெற்ற முதல் தேர்தல் இது என்பது நினைவு கூரத்தக்கது. பிரிட்டனில், வாக்குச்சீட்டு முறையில் தேர்தல் நடைபெற்றது.

# கீர் ஸ்டார்மர் புதிய பிரதமர்



**லண்டன், ஜுலை 05**

இன்று முதல் புதிய அத்தியாத்தைத் தொடங்குவோம் என்று பிரிட்டன் நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற கீர் ஸ்டார்மர் தெரிவித்துள்ளார்.

பிரிட்டன் நாடாளுமன்ற தேர்தலில் தொழிலாளர் கட்சி வெற்றி பெற்றுள்ளது. 411 இடங்களில் வெற்றி பெற்று 14 ஆண்டுகளுக்கு பிறகு பிரிட்டனில் ஆட்சியை பிடித்துள்ளது. தேர்தல் வெற்றியை அடுத்து லண்டனில் ஆயிரக்கணக்கான ஆதரவாளர்கள் மத்தியில் வெற்றி உரையாற்றிய கீர் ஸ்டார்மர் கூறியவை வருமாறு:-

தேர்தல் வெற்றியின் மூலம் 14 ஆண்டுகளுக்குப் பிறகு நாடு அதன் எதிர்காலத்தைப் பெற்றுள்ளது. மக்கள் மத்தியில் ஒரு நிம்மதி ஏற்பட்டுள்ளது. இந்த மாற்றத்தை நாம்தான் செய்தோம். நம் முன்னால் சவால்கள் காத்திருக்கின்றன. நாட்டை புதுப்பிக்கும் பணி நம் முன் உள்ளது. பிரிட்டனை மீட்டெடுக்க நாம் தயாராக இருக்கிறோம்.

நாட்டின் மீது இருந்த ஒரு சுமை நீங்கிவிட்டது. இறுதியாக அந்த சுமை நீக்கப்பட்டுவிட்டது. இன்று முதல் நாம் புதிய அத்தியாயத்தைத் தொடங்குவோம். மாற்றத்திற்கான வேலையைத் தொடங்குவோம். அரசியல் என்றால் அது பொது சேவை செய்வதற்கானது என்ற நிலையை மீண்டும் நாம் உருவாக்குவோம். - என்றார்

பக்கங்கள் 04

கனடா முரசு

வெள்ளிக்கிழமை 05/07/2024

## டொரன்டோ நகரில் வீடு விற்பனை வீழ்ச்சி

ஒன்ராரியோ, ஜூலை 5

டொரன்டோ நகரில் ஜூன் மாத வீடு விற்பனை கடந்த ஆண்டை விட 16.4 சதவீதம் குறைந்துள்ளது.

C2




# 70 ஆவது நேட்டோ அமர்வு நவம்பரில் மொன்ரியலில்!

ஒன்ராரியோ, ஜூலை 5

70 ஆவது ஆண்டு நேட்டோ அமர்வை கனடா நடத்தவுள்ளது.

வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பான நேட்டோவின் நாடாளுமன்ற சட்டமன்றத்தின் 70 ஆவது ஆண்டுக் கூட்டத்தை கனடா நடத்தவுள்ளது.

கனடிய நேட்டோ நாடாளுமன்ற சங்கம் ஜூலை நான்காம் திகதி (நேற்று) இந்த அறிவித்தலை வெளியிட்டது.

இந்த அமர்வு மொன்ரியலில் நவம்பர் மாதம் 22ஆம் திகதி முதல் 25ஆம் திகதி வரை நடைபெறுகிறது.

300 பிரதிநிதிகள் இந்த அமர்வில் கலந்து கொள்ளவுள்ளனர்.

2018இல் இறுதியாக நேட்டோ அமர்வை கனடா ஹாலிபெக்ஸில் நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

# கனடாவின் உளவு அமைப்பின் தலைவர் பதவி விலகுகின்றார்



ஒன்ராரியோ, ஜூலை 5

கனடாவின் உளவு அமைப்பின் தலைவர் டேவிட் விக்னோல்ட் பதவி விலகுவதாக அறிவித்துள்ளார்.

CSIS என அழைக்கப்படும் கனடிய பாதுகாப்பு புலனாய்வு சேவையின் பணிப்பாளர் டேவிட் விக்னோல்ட் பொது சேவையில் இருந்து விலக முடிவெடுத்துள்ளார்.

அவர் ஏழு ஆண்டுகள் கனடாவின் உளவு அமைப்பின் தலைமைப் பதவியை வகித்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

டேவிட் விக்னோல்ட் கனடியர்களுக்கு வழங்கிய சேவைக்கு பொது பாதுகாப்பு அமைச்சர் டொமினிக் லெபிளாங்க் நன்றி தெரிவித்துள்ளார்.



# கார்டினர் அதிவேகச் சாலை விபத்தில் பெண் பலி; ஐந்து பேருக்குப் படுகாயம்

ஒன்ராரியோ, ஜூலை 5

கனடாவின் கார்டினர் விரைவுச் சாலையில் நடந்த விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். நான்கு பேர் படுகாயமடைந்தனர்.

கனடாவின் கிழக்கு நோக்கிய கார்டினர் அதிவேகச் சாலையில் நேற்று அதிகாலை 2 மணியளவில் இந்த மோசமான விபத்து நடந்தது.


ஸ்ட்ராச்சன் அவென்யூ அருகே இரண்டு வாகனங்கள் மோதிக்கொண்டமையில் ஒரு பெண் உயிரிழந்துள்ளார், மேலும் நான்கு பேர் படுகாயமடைந்துள்ளனர். விபத்தில் சிக்கிய ஐந்து பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் 50 வயதான பெண் ஒருவர் கவலைக்கிடமான நிலையில் இருந்தார்.

துர்திஷ்டவசமாக, அந்தப் பெண் காயங்களால் மருத்துவமனையில் உயிரிழந்துள்ளார்.

40 வயது மற்றும் 20 வயது வயதுடைய மற்ற இரண்டு பெண்களும் கடுமையான காயங்களுக்கு ஆளாகினாலும், அவர்களது உயிருக்கு ஆபத்து இல்லை.

விபத்து நேரத்தில் கார் சீட்டில் இருந்த சிறுமி மற்றும் 40 வயது மதிக்கத்தக்க ஆண் ஆகியோரும் காயமடைந்துள்ளனர்.

விபத்தை ஏற்படுத்திவிட்டுத் தப்பி ஓடிய சாரதியை டொராண்டோ பொலிஸ் அதிகாரிகள் சிறிது நேரத்தில் கைது செய்துள்ளனர்.இதையடுத்து சாரதி மீது வழக்கு தொடரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.




## டொரன்டோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டொரன்டோ பிராந்திய ரியல் எஸ்டேட் சபை இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

ஜூன் மாதத்தில் 6,213 வீடுகள் விற்பனையாகியுள்ளன. கடந்த ஆண்டு ஜூன் மாதத்தில் 7,429 வீடுகள் விற்பனையாகியுள்ளன.டொரன்டோ பெரும்பாக பகுதியில் சராசரி விற்பனை விலை 1.6 சதவீதம் குறைந்துள்ளது.

# லிபரல் எம்.பிக்களின் ஆதரவு பிரதமர் ட்ரூடோவுக்குத்தான்!

## துணைப் பிரதமர் கிறிஸ்டியா ப்ரீலேன்ட் தெரிவிப்பு



ஒன்ராரியோ, ஜூலை 5

லிபரல் நாடாளுமன்ற குழுவின் பெரும்பான்மையினர் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவை ஆதரிக்கின்றனர் என துணைப் பிரதமர் கிறிஸ்டியா ப்ரீலேன்ட் தெரிவித்துள்ளார்.

பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவின் தலைமைத்துவம் குறித்து தொடர்ந்து கேள்விகள் எழுந்துள்ள நிலையில் துணைப் பிரதமரின் இந்தக் கருத்து வெளியாகியுள்ளது.

கடந்த வாரம் டொரன்டோ - சென் போல்ஸ் தொகுதி இடைத் தேர்தலில் லிபரல் கட்சி தோல்வியை எதிர்கொண்ட நிலையில் இந்தக் கேள்விகள் தீவிரமடைகின்றன.

டொரன்டோ பெருநகரப் பகுதி நாடாளுமன்ற உறுப்பினர்கள் புதன்கிழமை மாலை துணைப் பிரதமர் இல்லத்தில் சந்தித்து இடைத்தேர்தல் முடிவுகள் குறித்து விவாதித்துள்ளனர். கன்சர்வேட்டிவ் கட்சிக்கு எதிர்பாராத வெற்றியை வழங்கியதன் மூலம் டொரன்டோ - சென் போல்ஸ் தொகுதி வாக்காளர்கள் லிபரல் கட்சிக்கு ஒரு வலுவான செய்தியை அனுப்பியுள்ளனர் என கிறிஸ்டியா ப்ரீலேன்ட் தெரிவித்துள்ளார்.




# ஒன்ராரியோவில் இரண்டு வாரங்களுக்கு விற்பனை நிலையங்கள் மூடப்படும் சூழல்

ஒன்ராரியோ, ஜூலை 5

கனடாவின் மதுபான விற்பனை நிலையமான LCBO (Liquor Control Board of Ontario) இன் ஊழியர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் இன்று ஆரம்பமாகலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வேலை நிறுத்தம் இடம்பெறுமாயின் அடுத்த இரண்டு வாரங்களுக்கு அனைத்து LCBO கடைகளையும் மூடும் நிலையைத் தோற்றுவிக்கும்.

ஒன்ராரியோ பொதுச் சேவை ஊழியர் சங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சுமார் பத்தாயிரம் LCBO ஊழியர்கள் வெள்ளிக்கிழமை நள்ளிரவு 12:01 மணி முதல் சட்டப்பூர்வ வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர் எனத் தெரிவித்துள்ளார்கள்.

ஊழியர்கள் வேலை நிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டால், அனைத்து LCBO விற்பனை நிலையங்கள் 14 நாள்களுக்கு மூடப்படும் என LCBO தெரிவித்துள்ளது.

ஓர் உடன்பாடு எட்டப்படவில்லை என்றால், 30 LCBO கடைகள் மாகாணம் முழுவதும் ஜூலை 19ஆம் திகதி முதல் திறக்கப்படும் என LCBO குறிப்பிட்டுள்ளது.

ஆனால் வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும் வரையறுக்கப்பட்ட நேரங்களில் இந்த LCBO கடைகள் செயல்படும் என கூறப்படுகிறது.

# கன்சர்வேட்டிவ் கட்சி தனது விளம்பரத்திற்காக கடந்த ஆண்டு 8.5 மில்லியன் டொலர் செலவு!

ஒன்ராரியோ, ஜூலை 5

கடந்த ஆண்டு கன்சர்வேட்டிவ் கட்சி விளம்பரத்திற்காக 8.5 மில்லியன் டொலர்களை செலவு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது ஏனைய அரசியல் கட்சிகளை விட கணிசமான அளவு அதிக செலவு என குறிப்பிடப்படுகின்றது.

இதேவேளை, ஆளும் லிபரல் கட்சி அதில் ஒரு பகுதியையே செலவு செய்துள்ளது.

லிபரல் கட்சி 2023இல் 381,000 டொலர்களையும், புதிய ஜனநாயகக் கட்சி 42,000 டொலர்களையும் செல வழித்துள்ளது.

2023ஆம் ஆண்டிற்கான அரசியல் கட்சிகளின் வருடாந்த நிதி வருமா னத்தில் இந்த விவரங்கள் வெளியா கியுள்ளன.




கனடிய தேர்தல் திணைக்களம் இந்த வாரம் இந்த விவரங்களை வெளியிட்டது.கடந்த கோடை காலம் முதல், தேசிய கருத்துக் கணிப்புகளில் லிபரல் கட்சியை விட கன்சர்வேட்டிவ் கட்சி முன்னணியில் உள்ளமை குறிப் பிடத்தக்கது.

# கனடாவில் சர்வதேச மாணவர்களுக்கு நிரந்தர வதிவிட உத்தரவாதம் இல்லை!

கனடாவில் படிக்கும் வெளிநாட்டு மாணவர்கள் இந்த ஆண்டு பல மாற் றங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த மாற்றங்கள் கனடாவில் பயிலும் வெளிநாட்டு மாணவர்களுக்கு நிரந்தர வதிவிடம் கிடைப்பது உத்தர வாதம் இல்லை என்பதைச் சுட்டிக் காட்டுவதாகக் கூறப்படுகின்றது.

கனடாவில் வேலை செய்வதற்கும், பட்டப்படிப்புக்குப் பிறகு நாட்டில் நிரந்தரமாக குடியேறுவதற்கும் பல வழிகள் இருந்தாலும், கனடாவின் சட்டதிட்டங்களும் அதில் கொண்டு வரப்படும் மாற்றங்களும் அதனை எளிதாக அணுக அனுமதிப்பதில்லை.

கனடாவில் நியமிக்கப்பட்ட கற்றல் நிறுவனத்தில் (DLI) பட்டம் பெற்ற சர்வதேச மாணவர்கள், கனடாவில் நிரந்தர வதிவிடவுரிமை பெறுவதற்கு முன் பல தடைகளைத் தாண்ட வேண்டும்.

முதலாவதாக, பட்டதாரிகள் பல பொருளாதார வதிவிடவுரிமை திட்டங் களுக்குத் தகுதி பெறுவதற்குப் பணி அனுபவத்தைப் பெற வேண்டும். பொதுவாகப் பட்டப் பின் பணி அனு மதி பெறுவது, கனடாவில் பெரும் பாலான தொழில்களில் பெரும் பாலான நிறுவங்களின் பணிபுரிய உதவியாக இருக்கும்.

தகுதியை உருவாக்கிய பிறகு, கனடாவில் நிரந்தரமாக தங்க விரும் பும் பட்டதாரிகள், தொடர்புடைய நிரந்தர வதிவுரிமை பெறும் திட்டத் திற்கு விண்ணப்பிக்க வேண்டும்.

பெரும்பாலும் சர்வதேச பட்ட தாரிகள் Canadian Experience Class (CEC) திட்டத்திற்கு, Express Entry அமைப் பிற்குள் விண்ணப்பிக்கின்றனர். இது கனேடிய கல்வி மற்றும் பணி அனு பவம் உள்ளவர்களுக்காக உருவாக்




கப்பட்ட ஒரு பொது அணுகல் முறைமை ஆகும்.

ஆனால், பட்டதாரி மாணவர்கள் தங்கள் மாகாணத்திலோ அல்லது வசிக்கும் பிரதேசத்திலோ Provincial Nominee Programs (PNPs) போன்ற பிற வழிகளையும் பயன்படுத்திக்கொள்ளமுடியும்.

சில PNP ஸ்ட்ரீம்கள் பட்டப்படிப்பை முடித்த சர்வதேச பட்டதாரி மாணவர் களை நேரடியாக குறிவைக்கின்றன.

நிரந்தர வதிவிட உரிமைக்கு இந்த எளிய மாற்றம் பெரும்பாலும் ஏற்கெனவே காத்திருப்பவர்களால் நிரப்பப்படுகிறது. மேலும் இப்போது கனடாவின் தொழிலாளர் சந்தை மற்றும் மக்கள்தொகைத் தேவைக ளுக்கு ஏற்ப முன்னுரிமை முறையைக் கொண்டுள்ளது.

எடுத்துக்காட்டாக, எக்ஸ்பிரஸ் நுழைவு அமைப்பு சமீபத்தில் வகை அடிப்படையிலான தேர்வுகளின் (category-based selections) அமைப்பை இணைக்கத் தொடங்கியது. பிரெஞ்சு மொழித் திறன் மற்றும்/அல்லது ஐந்து தேவைப்படும் துறைகளில் ஒன்றில் தொழில்முறை அனுபவம் உள்ள வர்களுக்கு வதிவிட உரிமைக்கான முன்னுரிமை வழங்கப்படும்.

இதன் பொருள் என்னவென்றால், கனடாவின் Canada's federal immigration system இப்போது அதிக விரிவான தரவரிசை அமைப்பு (CRS) மதிப்பெண்களைக்கொண்டவர்களைக் காட்டிலும் இந்த வகைகளுக்குப் பொருந்தக்கூடிய விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை அளிக்கும்.

பல்வேறு PNP ஸ்ட்ரீம்களில் இதே போன்ற இயக்கவியல் இருப்பதைக் காணலாம், இதில் தொழில்முறை அனுபவம், மக்கள்தொகைப் பண்புகள் மற்றும் மாகாணம்/பிரதேசத்தில் உள்ள குடும்பங்கள் கூட அதிக CRS மதிப்பெண்களைப் பெற்றவர்களை விட வதிவிட உரிமை அந்தஸ்தைப் பெறலாம்.

இந்த காரணிகள் நிரந்தர வதி விடம் பெறுவதற்கான முயற்சியில் ஒரு சர்வதேச பட்டதாரிக்கு எதிராக செயல்படலாம்.

பெரும்பாலும் சர்வதேச மாண வர்களும் கனடாவில் தங்குவதற்கு அவர்களின் பட்டப் பின் பணி அனு மதியின் நீளத்திற்குக் கட்டுப்பட்டுள் ளனர். ஒரு சர்வதேச பட்டதாரி அவர்களின் பட்டப் பின் பணி அனுமதி செல்லுபடியாகும் காலத்திற்குள் நிரந்தர வதிவிட உரிமையைப் பெற வில்லை என்றாலோ, அவர்களால் புதிய தற்காலிக வதிவிட நிலையைப் பெற முடியவில்லை என்றாலோ, அவர்கள் கனடாவை விட்டு வெளி யேற வேண்டும்.

அவர்களின் Express Entry profile அவர்கள் இன்னும் தங்கள் திட்டத்தின் தகுதி வரம்புகளை பூர்த்தி செய்தால் செல்லுபடியாகும். அதே வேளையில், கனடாவில் தொடர்ந்து இருக்க விரும்பும் சர்வதேச பட்டதாரிகளுக்கு இது மற்றொரு தடையாக இருக்கும்.